DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC.No. | : | 102/2017 |
| Deposition of Witness for | : | P.W.11 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | பாலாஜி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.07.2025

**முதல் விசாரணை:**

நான் தேவகோட்டை அண்ணாநகரில் வசித்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னை போலீஸார் விசாரிக்கவில்லை. மேற்கண்ட கையெழுத்துக்களை நான் எதற்கு போட்டேன் என்றால் போலீஸார் போடச்சொன்னதால் போட்டேன் அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. **அந்த கையெழுத்துக்கள் அ.சா.ஆ 4, 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**(சாட்சி அவராகவே சாட்சி கையெழுத்து காவல் நிலையத்தில் போடச்சொன்னார்கள் என்று கூறினார்.) (சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)

**குறுக்கு விசாரணை:**

1. கடந்த 05.02.2007ம் தேதி சவாரி செய்து ஆட்டோ ஓட்டி வந்து கொண்டிருக்கும் சமயத்தில் காலை சுமார் 9.00 மணியளவில் தேவகோட்டை சிலம்பனி வடக்கு கருணாகரன் மகன் ராஜேஸ் என்பவரை கோதண்டராமன் கோவில் முன்பு

சந்தித்து பேசிகொண்டிருக்கும் சமயத்தில் தேவகோட்டை நகர் காவல் நிலைய ஆய்வாளர் ஒரு நபரை பிடித்து விசாரணை செய்தார் என்றும், அந்த நபர் பனசம்மகோட்டையைச் சேர்ந்த கணபதி என்பவர் மகன் காசி விசுவநாதன் என்றும், அவர் போலீஸாரின் எவ்வித அச்சுறுத்தல் இன்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தேவகோட்டை நகர் காவல் நிலைய குற்ற எண்.10/2007 ல் தானும் தன்னுடன் சேர்ந்தவர்களும் பயன்படுத்திய அருவாள், கம்பி, உருட்டுக்கட்டை ஆகியவைகளை காண்பிப்பதாக சொன்னதன் பேரில் காவல் ஆய்வாளர் மேற்படி நபரையும் எங்களையும் அழைத்துக்கொண்டு மேற்படி நபர் சொன்ன இடமான தேவகோட்டை பால்காவடியார் வீதியில் சொர்ணமூர்த்தி பாடசாலை கேட்டில் உள்பகுதியில் இருந்து எடுத்து ஆஜர் செய்த அரை அடி நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய முக்கால் அடி அருவாள் உள்ளடங்கிய மொத்தம் 1 1/4 அடி நீளமுள்ள அருவாள் ஒன்றும் 2 1/4 நீளமுள்ள உருட்டுக்கட்டை மற்றும் சுமார் 2 அடி நீளமுள்ள இரும்பு கம்பிகள் இரண்டு ஆகியவற்றை எதிரி காசிவிஸ்வநாதன் எடுத்து ஆஜர் செய்வதை காவல் ஆய்வாளர் அத்தாட்சியின் பேரில் காலை சுமார் 9.45 மணி அளவில் எங்கள் இருவர் முன்னிலையிலும் கைப்பற்றினார்கள் என்றும், மேற்படி காசி விஸ்வநாதன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், காவல் ஆய்வாளர் தயார் செய்த அத்தாட்சியில் நானும் ராஜேசும் சாட்சிகளாக கையெழுத்து இட்டோம் என்று போலீஸார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கின் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை )**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.